செ.வெ.எண். 42/ஜூன் தேதி : 17.06.2016

# பத்திரிக்கைச் செய்தி

## தொழில் துவங்க ஆர்முள்ள தொழில்முனைவோர்கள் மாவட்ட தொழில் மையம் சிட்கோ மூலம் விண்ணப்பித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!

தமிழக அரசு படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பினை அவரவர்களின் சொந்த ஊரிலேயே குறு, சிறு உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்கள் துவக்க வழியேற்படுத்திகொடுப்பது. வேலைவாய்ப்பிற்காக இடம் பெயர் தலைதவிர்ப்பது மற்றும் வறுமைக் கோட்டில் உள்ளவர்களின் வாழ்க்கைத்தரம் உயரவாயப்பு ஏற்படுத்தி தருவது ஆகியவற்றை நோக்கமாக கொண்ட ஒரு சிறப்பான திட்டமாகும்.

**திட்டத்தின் தன்மை மற்றும் நிதிஉதவி விவரம்:-**

நகர மற்றும் ஊரகப் பகுதிகள் ஆகிய மாவட்டத்தின் அனைத்து பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்பற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். உற்பத்தி தொழில்களுக்கு அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரையிலும், சேவை தொழில்களுக்கு அதிகபட்சமும் ரூ.3 இலட்சமும், வியாபார நிறுவனங்களுக்கு ரூ.1 இலட்சமும் இத்திட்டத்தின் கீழ் வங்கிக் கடனாக வழங்கப்படும். பொருளாதார ரீதியாக நன்கு நடைபெறக் கூடிய உற்பத்தி, சேவை மற்றும் வியாபாரம் ஆகிய திட்டங்களுக்காக விண்ணப்பிக்கலாம். விவசாயம் மற்றும் விவசாயத்துடன் நேரடியான தொடர்புடைய இனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெற இயலாது.

**தகுதியுடைமை:-**

- 18 வயது நிரம்பியவர்கள் பொது பிரிவினருக்கு அதிக பட்ச வயது வரம்பு 35, சிறப்பு பிரிவினருக்கு அதிக பட்ச வயது வரம்பு 45க்குள் இருக்க வேண்டும்.
- கல்வி தகுதி-குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- குடும்பவருமானம் - வருடத்திற்கு 1,50,000/-க்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
- விண்ணபதாரரோ, அவர்களின் குடும்பத்தினரோ எந்த ஒரு வங்கியிலும் தவணை தவறிய கடன்தாரராக இருப்பின் இத்திட்டத்தின் கீழ் கடன் பெற தகுதியற்றவர் ஆவார். மேலும், ஏற்கனவே வேறு எந்த துறை மூலமாகவும் அரசுமானியத்துடன் கூடிய கடன் திட்டத்தில் பயன் பெற்று வரும் இத்திட்டத்தின் கீழ் கடன் பெற தகுதியற்றவர்.

தொழில் முனைவோரின் பங்களிப்பாக திட்ட முதலீட்டில் 10 சதவீதம் தொகையினை பொதுப் பிரிவினரும், 5 சதவீதம் தொகையினை ஆதிதிராவிடர், பழங்குடியினர், பின் தங்கிய வகுப்பினர், மிகவும் பின் தங்கிய வகுப்பினர் / சிறுபான்மையினர், பெண்கள், முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள் ஆகியோர் வங்கியில் திட்ட முதலீட்டு தொகையினை செலுத்த வேண்டும்.

**திட்டமுதலீட்டில் 25 சதவீதம் தொகை மானியமாக அரசால் வழங்கப்படும்.**

மாவட்ட தொழில் மைய பொது மேலாளரை தலைவராகவும், மாவட்ட முதன்மை வங்கி மேலாளர், தாட்கோ மாவட்ட மேலாளர், வங்கிகளின் பிரதிகள், குறு, சிறு நடுத்தர தொழிற்சங்க பிரதிநிதி, தேசிய சிறு தொழில் கழக பிரதிநிதி, வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வளர்ச்சி முகமை, மகளிர் திட்ட அலுவலர் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட தேர்வுக் குழுவினரால் நேர்க்காணல் நடத்தப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.

தொழில் துவங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர், பொதுமேலாளர், மாவட்டத் தொழில் மையம், சிட்கோ தொழிற்பேட்டை, சேலம் மெயின் ரோடு, தர்மபுரி - 636 705 அவர்களை அணுகி விண்ணப்பம் பெற்று, திட்ட அளிக்கை, கல்வித் தகுதிச் சான்று, இருப்பிடச் சான்று, சாதிச் சான்று, வருமானச் சான்று ஆகியவற்றின் நகல் இணைத்து விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.